[1994 மார்ச் 17

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தக் குறிப்பும் அரசிடம் தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 3, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

3—

நகர்ப்புற நிலவரி நிலுவைத் தொகைகளை வசூலித்தல்.

*20795—திரு. ஆர். சிங்காரம்:
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நகர்ப்புற நிலவரி நிலுவைத் தொகைகளை வசூலிக்க விரைவான நடவடிக்கை எடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். தற்போது பெரியதனக்காரர்களிடமிருந்து நிலவரியை வசூலிக்காமல் சாதாரண சிறிய கடைகள் மீது நிலவரி போட்டு, வசூலிப்பதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நிலுவையில் இருக்கிற கோடிக்கணக்கான ரூபாய்களை மிக விரைவாக வசூலிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எந்த வகையில் எடுத்திருக்கிறது என்பதை விளக்க, அறிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் சிறியவர்கள், பெரியவர்கள் என்று பார்ப்பது இல்லை. இதில் மனை எவ்வளவு என்று பிரித்துவிடுகிறோம். சென்னை என்றால் எவ்வளவு; சென்னையின் சுற்றுப்புறம் என்றால் எவ்வளவு என்று பார்க்கிறோம். இப்போது சென்னையைச் சுற்றியுள்ள பகுதியாக இருந்தால் 3 மனைகள் வரையில் வரியே இல்லை. சென்னை என்றால், 2 மனைகளுக்கு வரியே இல்லை. சென்னையின் சுற்றுப்புறப் பகுதியாக இருந்தால், 3 மனைகளிலிருந்து, 7 மனைகள் வரை 0.7 சதவீதம்; 7 மனைகளிலிருந்து 10 மனைகள் வரைக்கும் 1 சதவீதம்; 10 மனைகளிலிருந்து 20 மனைகள் வரைக்கும் 1.5 சதவீதம். இதேபோல் இவர்களுக்கு வரி விதிக்கப்பட்டிருக்

கிறது. இதில் பெரிய நிறுவனங்கள், சிறிய நிறுவனங்கள் என்று அல்ல. தொழில் நிறுவனங்கள் என்றால் அவர்களுக்குச் சலுகை கொடுக்கிறோம், அவர்கள் தொழில்கள் நடத்த வேண்டுமென்பதால். எனவே இதிலே பெரிய நிறுவனங்கள், சிறிய நிறுவனங்கள் என்ற பாகுபாடு இல்லை. எல்லோரிடமும் வசூலிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யாராவது பெரியவர்களிடமிருந்து வசூலிக்கப்படவில்லை என்று சொன்னால், நாளைக்கே அதற்கு நடவடிக்கை எடுக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 4, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர்.

4—

தமிழ்நாடு அரசு மத்திய தொகுப்புக்கு அரிசி வழங்கும் விவரம்.

*21696— திரு. கே. கந்தசாமி:
மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு மத்திய தொகுப்புக்கு ஆண்டுதோறும் அரிசி வழங்குகிறதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசுக்கு மத்திய அரசு ஆண்டுதோறும் எவ்வளவு டன் அரிசி கொடுக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசுக்கு மத்திய அரசு இதுவரை 70,800 டன் மாதந்தோறும் வழங்கி வந்தது. நாம் அதிக அளவிலே குடும்ப அட்டைகள் வழங்கி இருக்கிற அந்தச் சூழ்நிலையில் இன்னும் அதிக அளவில் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டோம். சென்ற மாதம் 15,000 டன் அதிகமாக தருகிறோம் என்று சொன்னார்கள். ஆனால்